**தலைப்பு 237 - தேசிய திட்டமிடல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஒக்தோபர் 26 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 91.71 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 81.51 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 10.20 மில்லியன் அதாவது 11.12 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 76.11 | 68.49 | 7.62 | 10.01 |
| மூலதனம் | 15.60 | 13.02 | 2.58 | 16.54 |
| மொத்தம் | 91.71 | 81.51 | 10.20 | 10.12 |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

திணைக்களத்திற்குரிய 23701 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 4.98 | 3.29 | 2.98 | 3.24 | 30.00 | 15.16 |

**2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

23701 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 213,887 ஆக இருந்தது. அந் நிலுவை மீதிகள் 11 ஆண்டுகள் முதல் 24 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்து வந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

### 3.2 செயலாற்றல்

வரிசை அமைச்சுகளின் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரிக்கும் போது அதற்காக ஒத்துழைப்பது திணைக்களத்தின் பிரதான செயற்பாடாக இருந்தது. அமைச்சினால் செயற்திட்டங்கள் தயாரித்து சமர்ப்பிக்கும் போது நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திற்கும் விரிவுபடுத்தும் வகையில் செயற்திட்டங்கள் பகிர்ந்தளிக்கப்படும் விதத்தில் தயாரித்து நாட்டின் அபிவிருத்தியை சமமான வகையில் மேற்கொள்வதற்காக திணைக்களம் ஒத்துழைப்பு வழங்குவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது திணைக்களம் ஒவ்வொரு செயற்திட்டத்தையும் மதிப்பிடுவது தொடர்பாக வழங்கப்பட்ட விபரங்களின் பிரகாரம் நீர் மற்றும் சுகநலன் செயற்திட்டம் நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் பரவலாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட முன்மொழிவுகள் தொடர்பாக கோவைகள் எழுமாறாக பரீட்சித்த போது செயற்திட்டமொன்றுக்காக வெளிநாட்டு நிறுவனமொன்றினால் நிதியத்தை வழங்குவதற்கு முன்வந்திருந்தது. அதற்கான விண்ணப்பங்கள் 2015 பெப்ரவரி 15 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. இதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் தொடர்பாக மேலதிக விபரங்களைக் கேட்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கு 2015 மே 19 ஆந் திகதி கடிதமொன்று திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், அதுவரையில் செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கிருந்த காலம் முடிவடைந்திருந்தது. இதனால் அச்செயற்திட்டத்திற்குரிய வெளிநாட்டு உதவியை பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தது.

(ஆ) திணைக்களத்திற்கு ஒவ்வொரு அமைச்சு / திணைக்களங்களிலிருந்து செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டிருந்த வெவ்வேறு செயற்திட்டங்கள் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அச்செயற்திட்டங்களை மதிப்பிடுவதற்கு உட்படுத்தப்பட்டதும் அவ்வாறு செய்யப்படாத செயற்திட்டங்கள் தொடர்பாக சரியான தகவல்கள் பதிவேடுகளில் உட்படுத்தப்படாதிருந்தமையால் தபால் தகவல்கள் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் பிரிவில் 2015 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட 08 செயற்திட்டங்கள் மற்றும் மின்சக்தி மற்றும் எரிசக்தி பிரிவின் 02 செயற்திட்டங்களின் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. போக்குவரத்துப் பிரிவில் 2015 ஆம் ஆண்டிற்காக 2016 இல் அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

**அங்கீகரித்த பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---------------------------------------------------------------------------------------------------------------

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரித்த பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 57 | 42 | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | - | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 28 | 12 | 16 |
| (iv) | ஆரம்ப நிலை | 29 | 27 | 02 |
| | மொத்தம் | 116 | 81 | 35 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட நூலகர் பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இலங்கை திட்டமிடல் சேவையின் உதவிப் பணிப்பாளரொருவர் அப்பதவியில் பதில் கடமை புரிவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார். திணைக்களத்தின் செயற்பாடுகளை பராமரித்துச் செல்வதற்காக தாபிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி தகவல் நிலையத்தின் நூலக அமைப்பு, பகிர்ந்தளித்தல், புலனாய்வு மற்றும் ஏனைய சேவைகள் போன்ற செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றிச் செல்வதற்கு இணைக்கப்பட்டுள்ள நூலகர் பதவிக்குப் பதிலாக திட்டமிடல் சேவையின் உத்தியோகத்தரொருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ளல் ஆக்கபூர்வமல்லாதாக இருப்பதால் அது அந்த உத்தியோகத்தரின் நிரந்தர கடமைகளுக்கு தடையொன்றாக உள்ளதாக அவதானிக்கப்பட்டது. மேலும் நூலகத்தின் நடவடிக்கைகளில் ஏதேனும் சிக்கலான நிலைமையொன்று தொடர்பாக 2015 நவம்பர் 30 ஆந் திகதிய TRE/D/NPD/2/15/03 ஆம் இலக்க கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட விடயங்களுக்கு இவ்வாறான நிலைமைகளும் காரணங்களாக இருக்க முடியுமென மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) திணைக்களத்தினால் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி, மின்சக்தி மற்றும் எரிசக்தி, துறைமுகம் கடல் மற்றும் விமானம் உட்பட வெவ்வேறு துறைகளுக்குரித்தாக காணப்படும் செயற்திட்டங்களை மதிப்பிடுவதற்காக ஒரே துறையில் இல்லையேல் ஒரே சேவையில் அனுபவத்தையுடைய உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இத்திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிவில் பொறியியலாளர் பதவியொன்றுக்கு உத்தியோகத்தரொருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் நிர்மாணத்துறையுடன் தொடர்பான செயற்திட்ட முன்மொழிவு மதிப்பீடு மிகவும் ஆக்கபூர்வமாக இருக்குமென அவதானிக்கப்பட்டது.